கட்டுநாயக்க சீதுவ நகர சபை - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கட்டுநாயக்க சீதுவ நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநாயக்க சீதுவ நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாடு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைக
- ள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பாக விசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமத்துடன் தொடர்பான இணக்கமின்மை	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சீதுவ அமுன பாதையின் பல்நோக்குக் கட்டிடத்தின் காணிக்கு வழங்க வேண்டிய நட்டஈடு மற்றும் தாமத வட்டி ரூபா 11,877,580 தொகை நியமத்தின் 2.2(ஆ), 2.4 ஆம் பந்திகளின் பிரகாரம் நடைமுறைப் பொறுப்பாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாது நிகழத்தக்க பொறுப்புக்கள் எனக் காட்டப்பட்டிருந்தது.	சபை தீர்மானம் ஒன்றின் மூலம் எதிர்காலத்தில் பாதீட்டு தகவல்களை நிதிக் கூற்றுகளில் முன் வைப்பதாக	நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும
(ஆ)	நியமத்தின் 3.28 ஆம் பந்தியின் பிரகாரம் தொழிப்பாட்டு செயற்பாடுகளிலான காசுப் பாய்ச்சல் கணிப்பிடும் போது இருப்புக்களின் வேறுபாட்டு பெறுமதி ரூபா 3,086,111 ஆன தொழிற்படு மூலதன மாற்றலாக சீராக்குவதற்குப் பதிலாக மிகையாக செலுத்த வேண்டிய பெறுமதி பெறுமதி அதிகரித்தமை ரூபா 19,731,036 தொகை ரூபா 84,563,534 குறைவாகவும் பெறவேண்டிய பெறுமதி அதிகரித்தமை ரூபா 21,118,029 தொகை ரூபா 235,582,728 ஆல் குறைவடைந்ததாக காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் கணக்குககளைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக.	நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் பெறுமதிகள் சரியாக காண்பிக்கப்பட வேண்டும்.
(இ)	நியமத்தின் 3.29 ஆம் பந்தியின் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளிலான காசுப் பாய்ச்சல் கணிப்பிடும் போது மீளாய்வாண்டின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின கொள்வனவுப் பெறுமதி ரூபா 48,983,230 ஆக இருந்த போதும் அது ரூபா 48,396,232 என ரூபா 586,998 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	கூட்டல்களின் பெறுமதி காண்பிக்கப்பட்டுள் ளதாக	நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் பெறுமதிகள் சரியாக காண்பிக்கப்பட வேண்டும்.

1.6.2 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் அடையாளம் காணப்பட்ட மூலதனச் செலவு மானியங்கள் விரிவான வருமான கூற்றில் ஆண்டில் பெறப்பட்ட மூலதனச் செலவு மானியங்களிலிருந்து கழித்துக் காண்பிக்கப்பட வேண்டிம் போதிலும் அவ்வாறு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக	கணக்கீடு செய்தல் சரியாக செய்யப்பட வேண்டும
(ஆ)	மீளாய்வாடிற்கான பெறுமானத் தேய்மான பெறுமதி ரூபா 64,139,382 ஆக இருந்திருக்க வேண்டிய போதிலும், அது ரூபா 67,944,777 என ரூபா 3,805,395 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக	கணக்கீடு செய்தல் சரியாக செய்யப்பட வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழெ காட்டப்பட்டுள்ளன.

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நகர சபையின் நிர்வாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான விதி 395	ஒரு சொத்தின் கேள்வி பெறுமதியை தீர்மானிக்க எப்போதும் ஒரு பட்டய மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாக பயன்படுத்தப்பட வேண்டும் சீதுவ வியாழக்கிழமை வாரச் சந்தை மற்றும் அவெரிவத்த தினசரி சந்தைக்கான மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இது தொடர்பாக கவனம் செலுத்தப்படும் என்பதாக	விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி	15 வாகனங்களுக்கான எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.	எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப் படுவதாக	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட
(இ)	2016 நவம்பர் 04 ஆந் திகதிய வர்த்தமானியின் பிரகாரம்	கட்டணம் செலுத்தப்படாத அறிவித்தல் பலகைகளை அகற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்	நியம உப சட்ட உறுப்புரைகளின் பிரகாரம் நடவடிக்கை

	பின்பற்றப்பட்டிருந்த 2015 திசெம்பர் 28 ஆந் திகதிய ஆம் இலக்க நியம உறுப்புரையின் 19 மற்றும் 20 ஆம் உறுப்பரை.		கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு ள்ளதாக.	எடுக்கப்பட வேண்டும். வேண்டும்.
(ஈ)	அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.4.1 வழிகாட்டி	முறையான அங்கீகாரங்களைப் பெறுவதற்கு போதுமான காலமொன்று வழங்கும் வகையில் கேள்வி மதிப்பீடு விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கேள்வி திறப்பதை 2022 ஏப்ரல் 26 ஆந் திகதி மேற்கொள்ளாமல் 01 மாதம் 12 நாட்களுக்குப் பிறகு அதாவது 2022 ஜூன் 08 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது..	கண்காய்வு விசாரணை ஏற்றுக்கொள் ளப்பட்டதாக	பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7.2 **அரசு வரிதேவைப்பாடுகளுடன் இணங்காமை**

	கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் 2021 ஏப்ரல் 09 ஆம் திகதிய GIR/2021/02-02 2021 ஆம் இலக்க கடிதம் மற்றும் 2019 யூலை மாதம் 09 ஆம் திகதிய GIR/2019/03-1(Ins.&cirl)இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைய வழங்குனர்களுக்கு பெறுமதி சேர் வரி கொடுப்பனவு தொடர்பான விபரங்ளை வரி முகாமைத்துவத்திற்காக உள்நாட்டு இறைவரி ஆணையாளரிற்கு அனுப்பியிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டிலிருந்து அறிக்கைகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதாக.	சுற்றுநிருபத்திற்கு அமைவாக அறிக்கைளை அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.
(ஆ)	2024 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட மீது வரிளை (திருத்தப்பட்ட) சட்டத்தின் 3 (2) C ,இன் பிரகாரம் வரி செழுத்த வேண்டிய கால எல்லைக்கு (காலாண்டிற்கு) வரிக்கு உற்படுகின்ற வழங்கல்கள் ரூபா 15 மில்லியன் அல்லது 12 மாதங்களுக்கு வரிக்குற்படுகின்ற வழங்கல்கள் ரூபா 60 மில்லியனை விடக் கூடலாம் என நியாயமான காரணங்கள் காணப்படும் போது ஒன்று சேர்க்கப்பட்ட பெறுமதியின் மேல் வரிக்காக பதிவு செய்யப்பட வேண்டியிருந்தும், கணக்காய்விற்குறப்பட்ட தினமான 2025 மார்ச் மாதம் 04 ஆம் திகதி வரையிலும் பதிவை பெற்றுக் கொண்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் வருமானம் பெறுமதி சேர்க்கப்பட்ட ரூபா 125,545,846 இற்காக 18 சதவீதத்தின் மேல் ரூபா 22,598,252 தொகை வரியும், தெரிவுப் பரிசோதனைக்கேற்ப 07 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளிற்காக ரூபா 1,004,603 ஒன்று சேர்க்கப்பட்ட பெறுமதியின் மேலான வரியையும் சபை இழந்திருக்கின்றது. .	2025 ஆம் ஆண்டிலிருந்து அறிக்கைகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதாக.	கணிப்பீடொான்றை மேற்கொண்டு சபை நிதியத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அடையாளம் கண்டு மேலதிக நடவடிக்கைக்ளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 69,230,588 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 147,401,208 ஆக இருந்தது.

2.2 நிதி கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த ரூபா 61,870 பெறுமதியான மதிப்பிழநத காசோலை தீர்க்கப்படாமல் இருந்ததுடன் மேலும் அந்த பெறுமதி மதிப்பிழந்த காசோலை பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை. நிர்வாகம் இது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தவில்லை.	மதிப்பிழந்த காசோலைகள் எதிர்காலத்தில் தீரவு செய்யப்படும் என்பதாக	மதிப்பிழந்த காசோலை மீதியை தீரவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2.3 வருமான நிருவாகம்

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன

	வருமான மூலம்	2024				2023			
		மதிப்பிடப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பிடப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை
		ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'
(i)	வீதவரியும் வரியும்	152,063	151,875	145,281	62,504	152,900	151,740	150,753	55,909
(ii)	வாடகை	12,890	15,811	16,013	730	16,538	11,587	14,008	931
(iii)	அனுமதிப் பத்திரக் கட்டணங்கள்	4,608	2,891	2,891	-	6,151	4,899	4,899	-
(iv)	ஏனைய வருமானம்	195,900	198,137	190,882	32,690	146,901	205,849	196,041	32,460
		365,461	368,714	355,067	95,924	322,490	374,075	365,701	89,300

2.3.2 சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**வீதவரியும் வரியும்**		
	2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிலுவையாக இருந்த ஆதன வரிப் பெறுமதி ரூபா 62.50 மில்லியன் என்பதுடன் அது பட்டியல்படுத்தப்பட்ட வருமானமான ரூபா 151.87 பெறுமதியின் 41 சதவீதமாக காணப்பட்டது. நிலுவை மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு சபையினால் முறையான நடைமுறையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை	நிலுவை மீதிகளை அறவிடுவதற்காக வருமானப் பரிசோதகர்கள் மற்றும் நடுக்கட்டு உத்தியோகத்தர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக.	நிலுவை வருமானங்களை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.
(ஆ)	**அனுமதிப் பத்திரக் கட்டணங்கள்**		
	முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட உரிமக் கட்டண வருமானம் 41 சதவீதத்தினால் அதாவது ரூபா 2,008,000 இனாலும் மதிப்பிடப்பட்ட வருமானம் 25 சதவீத்தினாலும் அதாவது ரூபா 1,543,000 இனாலும் குறைவடைந்திருந்தது.	2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபைத் தீர்மானத்தின் பிரகாரம் உரிமக் கட்டணங்கள் அறவிடப்பட்டாலும் 2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் நகர சபைகள கட்டளைகள் சட்டத்தின் எற்பாடுகளின் பிரகாரம் கட்டணங்கள் அறவிடப்பட்டிருப்பத னால் வருமானம் குறைந்திருப்பதாக.	வருமானங்களை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல் வேண்டும்.
(இ)	**ஏனைய வருமானங்கள்**		
	நீண்ட காலம் காட்சிப்படுத்தப்படுகின்ற அறிவித்தல் பலகைகள் தொடர்பாக சபையினால் வெளிக் களப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு கட்டணங்கள் உரிய காலத்தில் அறவிடப்படாத தனால் 03 நாட்களுக்கும் 1 1/2 வருடங்களுக்கும் இடைப்பட்ட கால எல்லைக்குள் கால தாமதமாக கட்டணங்கள் செலுத்தியதனால் 29 அறிவித்தல் பலகைகளிலிருந்து ரூபா 848,965 வருமானமொன்றை சபை இழந்திருக்கின்றது.	களத்தில் இருக்கி அறிவித்தல்களை அடையாளம் கஎ சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவித்திருப்பதாக	அறிவித்தல் பலகைக் கட்டணங்களை உரிய நேரத்தில் அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பெறுகை திட்டம்		
	36 பெறுகை செயற்பாடுகளுடன் தயாரிக்கப்பட்ட பெறுகை திட்டம் நிலைபேறான அபிவிருத்தி வழிகாட்டல்களுக்கு புறம்பாக தயாரிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டிற்கான பெறுகை திட்டம் நிலைபேறான அபிவிருத்தி வழிகாட்டல்களின் படி தயாரிக்கப் பட்டுள்ளதாக.	நிலைபேறான அபிவிருத்தி வழிகாட்டுதல்களின் பிரகாரம் பெறுகை திட்டத்தை தயாரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	திடக்கழிவு முகாமைத்துவம்		
	i. 1987 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பகுதி VI இன் விதிகளின்படி கழிவு முகாமைக்கு ஒரு உப உறுப்புறை யொன்றை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் ஒரு உப உறுப்புறை யொன்றை இயற்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதாக.	உப உறுப்புறை யொன்றை இயற்றுவதன் மூலம் கழிவு முகாமை முறைப்படுத்தப்பட வேண்டும்.
	ii. காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான சுமார் 10 ஏக்கர் பரப்பளவு கொண்ட சதுப்பு நிலத்தில் மன்றப் பகுதியின் 75 சதவீதத்திலிருந்து தினமும் சேகரிக்கப்படும் 25 டிராக்டர் லோட் மக்கும் கழிவுகளும், உக்காத கழிவுகளும், அம்பலமுல்லையில் பல ஆண்டுகளாகக் கொட்டப்பட்டு வந்தன. மேலும், ஆண்டு தோறும் சேகரிக்கப்படும் 12,000 கிலோகிராம் இரும்பு, 18,000 கிலோகிராம் பிளாஸ்டிக் மற்றும் 6,000 கிலோகிராம் கண்ணாடி ஆகியவற்றைப் பிரித்து வெளி தரப்பினருக்கு விற்பனை செய்வதற்கான வாய்ப்பை மன்றம் வழங்கியுள்ளது.	எதிர்காலத்தில் அந்த விசேட கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்படும்.	கழிவுகளை முறையாக அப்புறப்படுத்தவும், அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை சபை நிதியத்திற்காகப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
	iii. சபை அதிகாரப் பகுதியில் 25 தொழிற்சாலைகள் இருந்த போதிலும், 06 தொழிற்சாலைகள் மாத்திரமே கழிவுகளை சேகரிக்கின்றன, மேலும் பிற தொழிற்சாலைகளால் உருவாக்கப்படும் கழிவுகளை அகற்றும் முறை குறித்த தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	எதிர்காலத்தில் அந்த விசேட கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக	குப்பைகளை முறையாக அப்புறப்படுத்தி, மக்களுக்கு ஆரோக்கியமான சூழலை உருவாக்க வேண்டும்.
(இ)	பொதுமக்கள் முறைப்பாடுகள்		
	2023 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 02 பொதுமக்கள் முறைப்பாடுகளும் 2024 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 03 பொது முறைப்பாடுகளும மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்குள் தீர்க்கப்படவில்லை. இந்தப் முறைப்பாடுகளை சபை விசேட கவனம் தேவைப்படும் இயல்புடையதாக இருந்தன.	உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அறிவுறுத்தல்களின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	பொதுமக்கள் முறைப்பாடுகளை விரைவில் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சுபை அதன் அதிகார பிரதேசத்தில் உள்ள வியாபார பதாதைகளை ஆய்வு செய்து கட்டணங்களை அறவிடுவதற்ககு நடவடிக்கை எடுக்கவில்லை.	வர்த்தக இடங்களில் வர்த்தகம் தொடர்பான விளம்பரங்களிலிருந்து கட்டணங்களை அறவிடுவது தொடர்பாக கணக்கெடுப்பை நடத்தி வரப்படுகின்றது என்பதாக.	சபை அதிகார பிரதேசத்தில் உள்ள வியாபார பதாதைகளை ஆய்வு செய்து கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	நகர சபை அதிகார பகுதியில் காணிகளை கையேகப்பதற்காக கட்டான பிரதேச செயலாளரிடம் ரூபா 22,444,000 வைப்புத் தொகையாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், 01 முதல் 07 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திற்குரியதான ரூபா 10,244,000 ஆன பெறுமதியான காணிகளின் உரிமையைப் பெறுவதற்கு 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.	சபை ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் மேலும் எதிர்காலத்தில் பிற நடவடிக்கைகளை எடுக்க நடவடிக்கை எடுப்பதாக.	காணிகளின் உரிமையை தீர்வு செய்து அவற்றை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். .
(இ)	கணனி மென்பொருள் முறைமையொன்று மூலம் கலப்பு வருமானம், நீர் பட்டியல்கள், இருப்பு மற்றும் களஞ்சிய முறைமை, வலையமைப்பு மற்றும் சேவை கட்டணங்கள் ஆகியவற்றிற்காக கணினி மென்பொருள் அமைப்பை கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,657,692 செலவிடப்பட்ட போதிலும், மென்பொருள் மூலம் பணிகளைச் நிறைவேற்றும் இலக்கு அடையப்படவில்லை.	அனைத்து பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் மென்பொருளில் உள்ளிடப்படும் என்றும், எதிர்காலத்தில் மாதாந்த இணக்க கூற்றுக்கள் ஒப்பிடப்பட்டு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.	மென்பொருள் முறைமையொன்று மூலம் இலக்கை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	நகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள தெரு விளக்குகள் கொண்ட வீதி முறைமையினை வரைபடமாக்குதலுடடன் தொடர்புடைய பெறுகையில், அரசாங்க பெறுகை வழிகாட்டுதல்களின் வழிகாட்டலின் 4.2.2 (அ) இன் படி பெறுகை அட்டவணை தயாரிக்கப்படாதிருந்ததுடன் , மேலும் வழிகாட்டுதல் 2.11.1 (ஆ) இன் பிரகாரம் குழு கூட்டங்களின் திகதிகள் மற்றும் நேரங்கள் நிர்ணயிக்கப்படவில்லை. அதேபோல், பெறுகை வழிகாட்டல்கள் 3.8, 4.3.1 (அ), 2.8, 2.11.1 (அ), 2.11.2, 2.11.3 (அ), 2.12 (அ), 5.1.1 (அ)(ஆ), 5.2.1 (அ)(ஆ), 5.6.1(அ), 6,3,3 (அ), 6.3.6, 7.9 மற்றும் 9.7.2 ஆகிய வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பெறுகை வழிகாட்டல் பின்பற்றப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதாக	பெறுகை வழிகாட்டல் கோவையின் ஆலோசணைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 11,665,080 ஆன மொத்த கடன்பட்டோர் நிலுவைத் தொகையில், ரூபா 962,076 தொகை 05 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்தது. இந்தத் தொகையை அறவிடுவதில் முகாமைத்துவம் கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டில் உடனடியாகத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	கடன்பட்டோர் நிலுவைகளைத் தீர்வு செய்தல் வேண்டும்.

(ஊ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 142,787,792 ஆன மொத்த கடனகொடுத்தோர் மீதியில், 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,371,611 மீதியொன்றும் 3 முதல் 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரூபா 161,764 மீதியொன்றும் 1 முதல் 2 ஆண்டுகளுக்கு இடையில் ரூபா 11,076,462 மீதியொன்றும் இருந்தது.	2025 ஆம் ஆண்டில் பணம் செலுத்தப்படும் அல்லது அவற்றை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக	கடன் கொடுத்தோர் மீதிகளின் இருப்பு சரிபார்க்கப்பட்டு தீர்க்கப்பட வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நகர சபைகள் நிதி நிர்வாகத்துடன் தொடர்பான சம்பந்தப்பட்ட கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான விதி 347 இன் பிரகாரம் வருடாந்த குத்தகைக்கு வழங்கிய 07 சொத்துக்களுடன் தொடர்பான விலைமனுக் கோரல் செயன்முறை யின் போது விலைமனு நேர அட்டவனையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் நகர சபை நிதி விதிகள் 330, 335, 341, மற்றும் 373 இற்கு ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதாக.	நகர சபை நிதி விதிகளுக்கு அமைவாக சொத்துக்களை குத்தகைக்கு வழங்கும் போது நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.
(ஆ)	நிறுவனமொன்றிற்கு வாடகைக்கு வழங்கியிருந்த கட்டிமொன்றிற்காக அறவிடப்படவேண்டிய ரூபா 1,677,409 தண்டத் தொகை 2025 மார்ச் மாதம் 10 ஆம் திகதி வரையிலும் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதாக.	தண்டத் தொகைகளை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.
(இ)	2021 நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கட்டளைகள் / நிபந்தனைகள் 23(2) இற்கு ஏற்ப 88.82 பர்சஸ் விஸ்தீரணமுள்ள காணியின் ஆகக் குறைந்த ஏல விற்பணைக் காணியை துண்டு பிரித்து விற்பனையின் போது சபைக்குக் கையளிக்கப்படுகின்ற பொதுக் காணித் துண்டின் பதிவிற்கு சம்பந்தப்பட்ட ஏலதாரர் செலுத்த வேண்டிய முத்திரை வரி செலவுகளின் பெறுமதி ரூபா 111,000,000 ஆகக் காணப்படும்போது ரூபா 100,000 பெறுமதிக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதனால் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரை வரிச் சட்டத்தின் (விஷேட ஏற்பாடுகள்) பிரகாரம் 2 சதவீதத்தின் மேல் ரூபா 110,900,000 இற்காக சபை நிதியத்திற்குக் கிடைக்க வேண்டிய முத்திரை வரி வருமானமான ரூபா 2,218,000 தொகையை இழந்திருந்தது.	1980 ஆம் இலக்க மேல் மாகாணத்தின் நிதிப் பட்டயத்தின் கீழ் முறையாக நிதி செழுத்திய சான்றுப் பத்திரமொன்றாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக,	இது தொடர்பாக பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு அதற்குப் பொறுப்பானவர்க ளை அடையாளம் கண்டு ஏற்ப்பட்ட நட்டத்தை அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.
(ஈ)	2021 யூலை மாதம் 08 ஆம் திகதிய 2235/54 ஆம் இலக்க வர்த்தமாணிப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கட்டளைகள் ∴ நிபந்தனைகள் II ஆம் பிரிவில் 23(2) பிரிவின் பிரகாரம்	I ஆம் அட்டவனையில் “அ” படிவத்தின் iv ஆம் இணைப்பின் பிரகாரம் நடவடிக்கைகளை	திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கட்டளைகள் / நிபந்தனைகளின் பிரகாரம்

ஒக்கப்பட்ட காணித் துண்டை எவ்விதக் கட்டணங்களுமின்றி இங்கு 1 ஆம் அட்டவனையில் ‘‘அ’’ படிவத்தின் iv ஆம் இணைப்பின் படி சம்பந்தப்பட்ட அதிகார சபைக்குக் கையளிக்க வேண்டியிருந்தும், ஏலவிற்பனைக் காணிலில் பொதுப் பகுதிகளை வழங்கும்போது அதன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	மேற்கொள்வதாக.	செயற்படுதல் வேண்டும்..

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புகளை செய்யத் தவறியமை ரூபா 1,150,000 பெறுமதியான டாடா வகை கல்லி பவுசர் பழுதுபார்ப்புகளை முடிக்காமல் 2023 ஆகஸ்ட் மாதம் முதல் 2024 திசெம்பர் 31 வரை கராஜில் காணப்பட்டது.	பழுதுபார்ப்புக்குத் தேவையான பாகங்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருந்ததால் தாமதம் ஏற்பட்டதுள்ளதாக	பழுதுபார்ப்புகளை முறையாக மேற்கொண்டு சொத்துக்களை செயற்திறனாகப் பயன்படுத்த வேண்டும்.

3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கஸகஹவத்த வள நிலையத்தினைச் சுற்றி பாதுகாப்பு வேலியை நிர்மானிக்கும் கருத்திட்டத்தை. திட்ட வரைபடமொன்றை அனுமதித்துக் கொள்ளாமல் ரூபா 4,635,945 தொகைக்கு முன்வந்த ஒரே யொரு விலை கோருபவர் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்த்து. 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.1(ஈ) மற்றும் 4.22 ஆகிய வழிகாட்டல்களுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக	தேசிய பெறுகைக் கோவை வழிகாட்டல்களுக்கு இணங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.
(ஆ)	2024 ஆம் வருடத்தில் செயற்படுத்தப்பட்ட 10 கைத்தொழில்களுக்காக பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் ஒப்பந்த மாறுபாட்டிற்கான காரணம், அதற்குப் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் போன்றவைகளை குறிப்பிட்டு மாறுபடுதல் சான்றிதழொன்றை வழங்காமல் மேலதிக வேலைகளுக்காக ரூபா 3,717,015 தொகை செலுத்தப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் கொடுப்பனவுகள் விலை விலகல் குழுவொன்றிற்கு முன்வைப்பதாக	தேசிய பெறுகைக் கோவை வழிகாட்டல் கோவைக்கு இணங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

3.6 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
செயலாளர் பதவி, தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்), 02 முகாமைத்துவஉதவியாளர்கள், 02 பாலர் பாடசாலை ஆசிரியர்கள், 08 சாரதிகள் மற்றும் 01 வெல்டர் ஆகிய பதவிகள் வெற்றிடங்களாக இருந்ததுடன், மேலும் வருவாய் உருவாக்கும் செயல்பாட்டை நேரடியாக பாதிக்கும் 3 வருமான பரிசோதகர் பதவிகள் முறையே 2013 ஜனவரி 02, 2014 மே 11 மற்றும் 2015 ஜூலை 20 ஆந் திகிதமுதல் வெற்றிடமாக இருந்தன.	வெற்றிடங்களுக்கு உத்தியோகத்தர்கள் விண்ணப்பித்துள்ளதாக	சபையின் பணிகளை செயற்திறனாக மேற்கொள்ளும் வகையில் ஊழியர்களை முகாமை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 13 ஆம் பத்தியின் பிரனாரம் செயல் திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் மேலும் மீளாய்வாண்டின் அரையாண்டு மற்றும் வருடாந்த செயன் முன்னேற்ற மீளாய்வு மற்றும் அடையாளம் காணப்பட்ட இலக்குகளின் சாதனை ஆகியவற்றைக் குறிக்கும் செயன் முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	2024 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் மீண்டும் தயாரிக்கப்பட்டதாக	சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயல் திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.2 உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மில்லேனியம் அபிவிரத்தி இலக்குகள் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கைகளின் பிரகாரம் இடர்களை அடையாளம் காண்பது மற்றும் அந்த இடரகளின் அளவை நிர்ணயிப்பதன் அடிப்படையில் உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் திடக்கழிவு முகாமைத்துவம், பெறுகை, களஞ்சிய ஆய்வு, சுகாதாரம் மற்றும் சமூகத் துறை செயலாற்றல் மற்றும் வீதவரி சொத்தின் தற்காலிக மதிப்பீட்டின் சரியானதன்மை ஆகியவை சரிபார்த்தல் இடம் பெற்றிருக்கவில்லை.	சரியான தன்மையை பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகள் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.